**Deposition of Witness**
**In the Court of Additional Subordinate Judge, Tenkasi.**

Mcop 95 /2023

எ.ம.சா1 சலேற்றம்மாள்

| | | |
|---|---|---|
| Name | : | சலேற்றம்மாள் |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Occupation | : | |
| Age | : | |
| Date | : | 12.02.2026 |

சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு முதல் விசாரணை நிருபண வாக்குமுலம் தாக்கல்

நான் 3 மற்றும் 4 ம்எதிர்மனுதாரர்கள் நிறுவனத்தில் கோட்ட மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் என் நிறுவனம் சார்பாக என்னுடைய நிருபண வாக்குமுலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மை. அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான்.

1. 14.01.2023 ம் தேதியிட்ட விபத்து சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 1

2. விபத்து சம்பந்தமான மாதிரி வரைபடம் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 2

3. விபத்து சம்பந்தமான பார்வைமகசர் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 3

4. 3.1.2018 ம் தேதியிட்ட டி.என்.88 டி.1532 என்ற வாகனத்தின் ஆர் சி புத்தகம் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 4

5. 22.12.2022 தேதியிட்ட மேற்படி வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 5

6. 11.01.2023 ம் தேதியிட்ட மேற்படி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 6

7. 22.7.2020ம் தேதியிட்ட டி.என்.79.எச்.6032 வாகனத்தின் ஆர் சி புத்தகம் ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 7

8. 11.07.2020ம் தேதியிட்ட டி.என்.79.எச்.6032 என்ற வாகனத்தின் காப்பீடு சான்று ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 8

9. 17.2.2023ம் தேதியிட்ட குற்ற இறுதியறிக்கை ஜெராக்ஸ் நகல் எ.ம.சா.ஆ 9.

மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை

விபத்தில் தொடர்புடைய இரண்டு வாகனங்களும் எங்களது காப்பீடு நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாருக்கு பாத்தியப்பட்ட டி.என்.88 டி.1532 என்ற வாகனத்தின் காப்பீடு முழு காப்பீடு என்றால் சரிதான். விபத்து நடைபெற்ற ரோடு தென்வடல் ரோடு என்றால் சரிதான். இரண்டு வாகனங்களும் ஒரே திசையில் வடக்கில் இருந்து தெற்கு நோக்கி சென்றது என்றால் சரிதான். டி.என்.88 டி.1532 என்ற வாகனத்தின் ஒட்டுனர் மற்றும் அதன் உரிமையாளரை விசாரிக்கவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஒட்டுனர் மற்றும் உரிமையாளரை விசாரித்தது பற்றி தெரியவில்லை என கூறுவது பொய் என்றால் சரியல்ல. அந்த இரண்டு நபர்களையும் விசாரித்தால் எங்களுக்கு விரோதமாக வழக்கு இருக்கும் என்பதால் அவர்களை விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இந்த மனுவில் எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட வாகனத்தின் ஒட்டுனர் மற்றும் உரிமையாளர் மீது தான் குற்றச்சாட்டு சுமத்தி தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அவர்களை குற்றம்சாட்டி எங்களது காப்பீடு நிறுவனத்தில் இழப்பீடு கோரியுள்ளார் என்றால் சரிதான். எங்களிடம் காப்பீடு செய்யப்பட்ட 2ம் எதிர்மனுதாரர் வாகனம் பெட்ரோல்

பல்க் அருகே நிறுத்தி இருந்ததாக சொல்வது பொய் என்றும், வாகனம் இயக்கத்தில் இருந்த போது விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எங்களது காப்பீடு நிறுவனம் சார்பாக இந்த மனுவில் கள ஆய்வு செய்யப்பட்டது என்றால் சரிதான். கள பணியாளர் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். கள பணியாளர் அறிக்கையின் அடிப்படையில் நாங்கள் எதிருரை தாக்கல் செய்யப்படும் என்றால் சரிதான். அந்த கள ஆய்வு செய்யும் நபர் எங்களால் அமர்த்தப்படும் நபர் என்றால் சரிதான். களபணியாளர் அறிக்கையை வழக்கிற்கு விரோதமாக இருப்பதால் அதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. முழு காப்பீடு என்பது இரண்டு வாகனங்களுக்கும் அனைத்து பொறுப்புகளுக்கும் உள்ளடக்கியது என்றால் சரியல்ல. நிபந்தனைகளுக்கு உட்பட்டது. அந்த நிபந்தனைகளை சொல்ல முடியுமா என்றால் அந்த குறிப்பிட்ட பிரிமீயம் வாங்கியிருந்தால் அதற்கான தொகையை செலுத்திவிடுவோம். லாரியை பொறுத்து அனைத்து தலைப்புகளிலும் பிரிமீயம் வசூலிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இறந்து போன நபர் எங்களது நிறுவனத்தை பொறுத்து 3ம் தரப்பினர் என்றால் சரிதான். இறந்துபோன நபர் 3ம் தரப்பினர் என்பதால் எங்களது நிறுவனம் தான் இழப்பீடு வழங்க வேண்டும் என்றால் சரியல்ல. இறந்து போன நபரின் கவனக்குறைவால் தான் விபத்து ஏற்பட்டுள்ளது. அவர் மீது தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. விபத்து சம்பந்தமான குற்ற வழக்கு ஒருதலைபட்சமாக பதிவு செய்யப்பட்டது என்றும், சரியாக விசாரணை செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஒருதலைபட்சமாக பதிவு செய்யப்பட்ட வழக்கை மனுதாரர் தரப்பில் மீண்டும் விசாரிக்க கோரி கடந்த 13.2.2023ம் தேதியில் மனு

கொடுக்கப்பட்டுள்ளது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட முதல்விசாரணை வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. வழக்கு சம்பந்தமான முழு விபரம் தெரியாமல் நான் சாட்சியம் அளிப்பதாலும், ஆவணங்களை பரிசீலனை செய்யாமல் சாட்சியம் அளிப்பதால் என் சாட்சியம் ஏற்றுக்கொள்ளதக்கது அல்ல என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் பொருளாதார ரீதியாக பலம் உடையவர் என்பதால் அவருக்கு ஆதரவாக இறந்து போன நபருக்கு எதிராக குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. குற்ற இறுதியறிக்கையில் மறு விசாரணை செய்ய கோரிய மனுவை பற்றி சொல்லவில்லை என்றால் அது பற்றி தெரியவில்லை. மனுதாரர்களுக்கு எங்களது நிறுவனம் தான் இழப்பீடு தொகை வழங்க கடமைப்பட்டவர்கள் என்றால் சரியல்ல. 1,2 எதிர்மனுதாரர் மீதுள்ள குற்றச்சாட்டுக்கள் மறுக்கப்பட்டுள்ளதால் எங்களது நிறுவனம் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும என்றால் சரியல்ல.

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி